முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1328

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.05.2023, வெள்ளிக்கிழமை

1. கருணையே வடிவான குருபரனே
   கந்தவேலன் என்சூட்சுமமான குருஅரங்கனே
   பெருமைமிக்க ஞானசுடரேற்றி பேருலகை
   ஞானஜோதி பரவும் வண்ணம்
2. வண்ணமுடன் ஆற்றலாய் சைவநெறி
   வழங்கி உலகோர்க்கு தர்மம்காக்கும்
   காக்கின்ற அரங்கனே கருணாகரனே
   கருணைபட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. பெருமைபட ஞானஅறிவுரை ஆசி
   புகலுவேன் சோபகிருது விடைதிங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 05ம் நாள், 19.05.2023, வெள்ளிக்கிழமை)
   தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   தவசி தருகின்ற தர்மமே கலியின் சிறந்த தர்மம்
4. மண்ணுலகோர் அரங்கனை ஏற்று
   மாதர்மத்தை கையில் கொண்டு
   எந்நாளும் அரங்கன் நாமஜெபத்தில் இருந்து கொண்டே
   உயர்ந்த தர்மம் தொடர்ந்து செய்ய
5. செய்யவே உலகில் பெருமாற்றம் சேவை வழியே நடந்தேறக்கூடும்
   ஐயன் முருகன்என் அருள்பலம் கொண்ட அரங்கன்
   அகிலத்தை மாற்றுவதோடு இந்த கலியில் ஞானஆட்சி தந்து
   உலகோர் மகிழ அமைதிபெற பாதுகாப்புற ஆற்றல்பட அற்புதம் நிகழ்த்தக் கூடும்
6. கூடவே அரங்கன் திருவடி பற்ற
   குலமே பெருமை கொண்டு உலகத்தார்க்கு பிழையற
   பேதமெல்லாம் அகன்று புகலுவேன் பிரம்ம ஞானசூட்சுமம் கூடி
   காலனையும் வெல்லும் சக்தி பெற்று கலியுகத்தார் ஞானிகளாக மாற்றம் பெறுவர்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–